_ சமூகப் பராமரிப்பு அதிகாரிக்கான பணி பற்றி_

சமூகப் பராமரிப்பு அதிகாரிகள், தாதிமை இல்லங்களில் அல்லது மூத்தோர் பராமரிப்பு நிலையங்களில் மூத்தோருக்கு தரமான அன்றாட பராமரிப்பை வழங்குகிறார்கள். தாதிமை, சிகிச்சை போன்ற பல அம்சங்களில் அவர்கள் பயிற்சி பெற்றிருப்பார்கள். அவர்கள் மருத்துவ, சிகிச்சை குழுக்களுடன் இணைந்து, மூத்தோர் தன்னிச்சையான வாழ்வுக்குத் தேவையான திறன்களைக் கொண்டிருப்பதை உறுதிசெய்ய அணுக்கமாகப் பணியாற்றுவர்.

சமூகப் பராமரிப்பு அதிகாரிகள், தொழில்நுட்பம், உற்பத்தித்திறன் கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்கான பயிற்சியையும் பெற்றிருக்கிறார்கள். அவற்றின்மூலம், அவர்கள் மூத்தோருக்கான அடிப்படை சிகிச்சை, தாதிமைப் பணிகள் உள்ளிட்ட நேரடிப் பராமரிப்புக்குக் கூடுதல் நேரம் செலவழிக்கமுடியும்.

சமூகப் பராமரிப்பு அதிகாரி, மூத்த அதிகாரி, நிர்வாகி, மேலாளர் முதலிய பதவிகள்மூலம் சமூகப் பராமரிப்பு அதிகாரிகள் தங்கள் வாழ்க்கைத்தொழிலில் மேம்பாட்டை எதிர்பார்க்கலாம்.

ஒரு சமூகப் பராமரிப்பு அதிகாரியாக, நீங்கள் மூத்தோருக்குப் பின்வருபனவற்றில் ஆதரவு வழங்குவீர்கள்:
- அன்றாட வாழ்க்கைக்கான நடவடிக்கைகள் (தனிநபர் சுகாதாரம், உண்பித்தல், இடம் மாறுதல்)
- பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும் நடவடிக்கைகளையும் உருவாக்குதல்
- மூத்தோருக்கும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கும் இடையில், அவர்களின் மனநலன் கருதி ஆதரவுமிக்க உறவுமுறையை மேம்படுத்துவது உட்பட, மூத்தோரை ஈடுபடுத்தி, அவர்களுடன் தொடர்புகொள்ளுதல்
- அசைவுப் பயிற்சிகள், நடமாட்டப் பயிற்சி, பொழுதுபோக்கு நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்ளுதல்
- தாதிமைப் பராமரிப்புத் திட்டங்களின் ஒரு பகுதியாக, குழாய்வழி உண்பித்தல், திட்டமிடுதல்
- முன்பே பொட்டலமிடப்பட்ட மருந்து மாத்திரைகளை அளித்தல்
- காயங்களுக்கான அடிப்படைப் பராமரிப்பைக் குடியிருப்புப் பராமரிப்புச் சூழல்களில் மேற்கொள்ளுதல் (மூத்த சமூகப் பராமரிப்பு அதிகாரிகளுக்கு மட்டும் பொருந்தும்)

*விண்ணப்பிப்பதற்கு, எனக்கு சுகாதாரப் பராமரிப்பு அனுபவம் தேவையா?*

பயிற்சி வழங்கப்படும் என்பதால், முன் அனுபவம் இல்லாத வேலை தேடுபவர்கள் விண்ணப்பிக்க வரவேற்கப்படுகிறார்கள்.

உங்களுக்கு உள்ளூர்ச் சுகாதாரப் பராமரிப்புத் துறையில் இரண்டு ஆண்டுக்கும் மேலான அனுபவம் இருந்தால், நீங்கள் மூத்த சமூகப் பராமரிப்பு அதிகாரிக்காகப் பரிசீலிக்கப்படலாம்.